**மாகாணக்கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்**

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**தரம் - 11** **தமிழ்மொழியும் இலக்கியமும்** நேரம் : 1 மணித்தியாலம்

சுட்டெண் : புள்ளி

## பகுதி I

✦ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவிற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "தண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன் நுகராமண்டூகம்" என்பதில் வந்துள்ள **மண்டூகம்** என்பதன் ஒத்த கருத்து
 1) குளிர்மை 2) தவளை 3) தாமரை 4) கமலம்

2) "கொற்றத்தார்க் குரிசில் இவர் ஆர்? இங்கு **தார்** என்பதன் பொருள்
 1) வெற்றி 2) மாலை 3) தலைவன் 4) மலை

3) "எட்டுணையானும் இரவாது தான் ஈதல்...." இங்கு **ஈதல்** என்பதன் எதிர்ப்பதம்
 1) கொடுத்தல் 2) வழங்குதல் 3) ஏற்றல் 4) பகுத்துண்ணல்

4) "மனங்கொண்டது மாளிகை" இங்கு **மாளிகை** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
 1) மாடி வீடு 2) மணல் வீடு 3) கல்வீடு 4) குடிசை

5) "திரிகடுகம் உடலுக்குச் சுகமளிக்கும்" இங்கு **திரிகடுகம்** என்பதனால் கருதப்படுவது
 1) சுக்கு, வெந்தயம், மல்லி
 2) சுக்கு, மிளகு, திப்பிலி
 3) சுக்கு, பயறு, வெந்தயம்
 4) சுக்கு, மிளகு, பயறு

✦ **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) மாவின் இளம்பிஞ்சு வடு என்பது போல பலாவின் இளம்பிஞ்சு
 1) காய் 2) நுங்கு 3) கச்சல் 4) மூசு

7) அரசன் சபா மண்டபத்திலே அமைச்சர், படைத்தலைவர், அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழ வீற்றிருக்கும் இடம்
 1) ஒப்புரவு 2) ஓலக்கம் 3) ஓம்படை 4) அரண்மனை

8) எமது பாடசாலையின் நூல்நிலையம் அதன் அமுதவிழாவைக் கொண்டாடியது. அமுதவிழா என்பது
 1) 50ஆவது ஆண்டு நிறைவு விழா
 2) 60ஆவது ஆண்டு நிறைவு விழா
 3) 75ஆவது ஆண்டு நிறைவு விழா
 4) 80ஆவது ஆண்டு நிறைவு விழா



lkexam.com

9) பின்வருவனவற்றுள் ஒல்லாந்து மொழிச் சொற்கள் கொண்ட தொகுதி
   1) கேத்தல், நொத்தாரிசு, தோம்பு
   2) கடதாசி, கரத்தை, சப்பாத்து
   3) குசினி, பீரோ, பட்டாளம்
   4) பென்சில், மைல், சினிமா

10) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பது
   1) ஐம்பொறி 2) ஐம்பூதம் 3) ஐம்புலன் 4) ஐம்பால்

11) "கைகொடுத்தல்" என்னும் இலக்கணைத் தொடருக்கு ஒத்த கருத்துள்ள மற்றோர் இலக்கணைத் தொடர்
   1) தோள் கொடுத்தல் 2) கை நீட்டுதல்
   3) கரையேறுதல் 4) கைப்பிடித்தல்

12) ஏழை எளியவர் என்பது
   1) இணைமொழித்தொடர்
   2) அடுக்குத் தொடர்
   3) மரபுத் தொடர்
   4) அடுக்கிடுக்குத் தொடர்

13) உடுக்களின் கூட்டம் திரள் என்து போல படை வீரர்
   1) கூட்டம் 2) குரு 3) கும்பல் 4) அணி

14) பயறு என்பது எவ்வகைக் குற்றியலுகரம்
   1) வன்றொடர் 2) மென்றொடர் 3) உயிர்த்தொடர் 4) ஆய்தத்தொடர்

15) நிறுத்தக் குறிகளில் அரைப்புள்ளி அல்லது தொடரிசைக் குறி எனப்படுவது
   1) , 2) ; 3) : 4) !

16) "உள்ளதை உள்ளபடி சொன்னால், பலரைப் பகைத்துக் கொள்ள வேண்டி வரும்" எனும் கருத்துள்ள பழமொழி
   1) ஊர்வாயை மூட உலைமூடி இல்லை
   2) கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையிலே தெரியும்
   3) யதார்த்தவாதி வெகுசன விரோதி
   4) கெடுகுடி சொற் கேளாது

17) "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்னும் பழமொழிக்கு ஒத்த வேறொரு பழமொழி
   1) அமாவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா?
   2) ஐயர் வருகிறவரை அமாவாசை காத்திருக்குமா?
   3) காலத்திற்கேற்ற கோலம்
   4) அலைமோதும் போதே தலை முழுகு

18) எமது பிரதேசங்களில் Super market இன் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. Super market என்பது
   1) பெரிய சந்தை 2) நாளங்காடி 3) சிறப்பங்காடி 4) சிறிய சந்தை

19) தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் கொண்டு அமைந்த வாக்கியம்
   1) தனிவாக்கியம் 2) கூட்டு வாக்கியம்
   3) வியங்கோள் வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

20) "கடிநகர்" என்பதில் கடி எனும் உரிச்சொல் உணர்த்தி நிற்கும் பொருள்
   1) காவல் 2) கூர்மை 3) வாசனை 4) அழகு



lkexam.com

✦ **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) "இல்" எனும் உருபு இடப்பொருளை உணர்த்தும் வேற்றுமை
   1) மூன்றாம் வேற்றுமை   2) ஏழாம் வேற்றுமை
   3) ஐந்தாம் வேற்றுமை   4) எட்டாம் வேற்றுமை

22) "பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற் சித்திரமே..." இங்கு கையாளப்பட்ட அணி
   1) உவமை அணி   2) தற்குறிப்பேற்ற அணி
   3) உருவக அணி   4) உயர்வு நவிற்சி அணி

23) "சாரைப்பாம்பு" என்பது
   1) உவமைத்தொகை   2) உம்மைத் தொகை
   3) அன்மொழித்தொகை   4) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

24) பின்வருவனவற்றுள் பகுபத உறுப்புக்கள் ஆறும் கொண்ட சொல்
   1) ஓடினான்   2) விளையாடினான்   3) நடந்தனன்   4) படித்தான்

25) நல்ல பாம்பை - நச்சுப்பாம்பு எனக் கூறுவது
   1) மங்கலம்   2) குழூக்குறி   3) இடக்கரடக்கல்   4) மரூஉ

26) "இம்முறை கடும் வரட்சி நிலவுகின்றது"
   "மக்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்"
   இவ்வாக்கியங்களை இணைக்க பொருத்தமான இணைப்பிடைச்சொல்.
   1) அத்துடன்   2) ஆயினும்   3) ஆகவே   4) எனினும்

27) பின்வருவனவற்றுள் உயர்திணைப் பெயர்கள்
   அ) அமைச்சர்   ஆ) அவைத்தலைவர்   இ) காதல்
   ஈ) காதலி   உ) கட்டாக்காலி
   1) அ, ஆ, ஈ   2) ஆ, ஈ, உ   3) ஆ, ஈ   4) ஈ, உ

28) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சிக்கு உதாரணமாக அமைவது
   1) கடலலை   2) பலாவிலை   3) ஈரப்பலா   4) மாங்காய்

✦ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதிகளைத் தெரிவு செய்க.**

29) 1) கூட்டுப் பெயர் - வானொலி, குதிரைப்படை, கண்காட்சி
   2) ஆக்கப் பெயர் - கொடையாளி, புத்திசாலி, முயற்சி
   3) கூட்டு வினை - காட்டிக்கொடு, தந்தியடி, சுட்டிக்காட்டு
   4) தெரிநிலை வினைமுற்று - செய்தேன், படித்தானை, படித்தான்

30) 1) பெயர்ப்பகாப்பதம் - வளி, ஆ, தீ
   2) வினைப்பகாப்பதம் - வா, உண், கூர்
   3) இடைப் பகாப்பதம் - இனி, மற்று, பிற
   4) உரிப் பகாப்பதம் - சால, உறு, நனி

✦ **பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.**

31) மனிதனின் எதிரிகள் இரண்டு. ஒன்று பயம், மற்றது கவலை, பயம் வலுப்படைந்த வியாதி. கவலை அரிக்கும் நோய், பயத்தாலும் கவலையாலும் மனிதன் வாழ்வை நரகமாக்கிக் கொள்கிறான். சூழ்ந்திருப்போர் வாழ்வையும் கெடுக்கிறான்.
   1) பயத்தை விட கவலையினால் தான் மனிதன் அதிகம் பாதிக்கப்படுகிறான்
   2) மனிதனின் வாழ்வு பயத்தாலும் கவலையினாலும் பெரிதும் பாதிக்கப்படுகிறது
   3) பயத்தாலும் கவலையாலும் மனிதன் தன் வாழ்வையும் பிறர் வாழ்வையும் கெடுக்கிறான்
   4) மனிதனைச் சூழ்ந்திருப்போரின் எதிரிகளே பயமும் கவலையுமாகும்.



lkexam.com

32) இன்று உலகில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளை மக்கள் பேசுகின்றனர். இவற்றுள் காலப் பழமையும் இலக்கிய வளமும் பெற்றுள்ள மொழிகள் ஆறு. அவை கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், வடமொழி, சீனம் தமிழ் என மொழி ஆய்வாளர் கூறுவர். இவற்றுள் நூல் வழக்கிலன்றி உலக வழக்கிலும் தளர்ச்சியின்றி நடைபெற்று வருவது நம் தாய்மொழியாகிய தமிழாகும்

1) உலகிலே மக்கள் பேசும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளுள் தமிழும் ஒன்றாகும்.
2) உலகில் பேசப்படும் மொழிகளுள் பழமையும் இலக்கிய வளமும் உள்ள மொழிகள் ஆறாகும்.
3) தொன்மையான மொழிகள் ஆறினுள் தமிழ் மொழியே இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் இன்றும் பயின்று வருகின்றது.
4) உலகில் பேசப்படும் மொழிகள் பற்றி ஆய்வாளர் பலர் ஆய்வு செய்து கொண்டே இருக்கின்றனர்.

✦ **சரியான வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

33) குற்றம் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை எங்கும் கைது செய்யப்படவில்லை.
மேற்படி வாக்கியத்தின் தர்க்க ரீதியான செவ்வையான வடிவம்

1) குற்றச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை
2) குற்றச்சம்பவம் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.
3) குற்றச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை.
4) குற்றச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை.

✦ **எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

34) 1) இந்நாட்டின் முதுகெலும்பாக விழங்குபவர்கள் உளவர்களாவர்
2) பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது
3) நவநீதன் ஒழிவு மறைவின்றி எந்த விடையத்தையும் வெளிப்படையாகப் பேசுபவன்
4) அங்கத்தவர்கள் எல்லோரும் கூட்டத்திற்குச் சமூகமழித்திருந்தார்கள்.

✦ **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

35) அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு செய்த .................................................................. அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்படுகிறது.
1) ஆய்வுரை 2) பரிந்துரை 3) அணிந்துரை 4) மதிப்புரை

36) நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான ........................................... ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
1) உடன்படிக்கை 2) பிரேரணை
3) வெள்ளையறிக்கை 4) ஆவணம்



lkexam.com

37) வறியவர்க்கும் வலது குறைந்தோர்க்கும் முதியோருக்கும் உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிப்பதற்கென ........................................ அமைக்கப்பட்டுள்ளன.

1) அன்னசாலைகள்
2) ஆதுலர்சாலைகள்
3) ஆச்சிரமங்கள்
4) பாசறைகள்

✦ **வாக்கியங்களில் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

38) அந்த மரத்தின் ஒவ்வொரு

1) பழமும் நல்லது
2) பழங்களும் நல்லவை
3) பழமும் நல்லவை
4) பழங்களும் நல்லது

39) இயற்கை அனர்த்தம் தொடர்பான முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழு, அண்மையிற் கூடி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதென்று

1) முடிவெடுத்தனர்
2) முடிவெடுத்தது
3) முடிவெடுத்தார்கள்
4) முடிவை எடுத்தது

40) சிலவாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) அது உலகம் முழுவதும் பொருத்தமான அறங்களை எடுத்துரைக்கின்றது
ஆ) அவற்றுள் திருக்குறள் ஈடு இணையற்றது
இ) இது பழமையான நாகரிகம் படைத்த நாடு
ஈ) அங்கே சங்ககாலம் எனப்படும் பழங்காலத்திலிருந்து பல நூல்கள் தோன்றின
உ) தமிழ் நாடு பரத கண்டத்தின் தென்பகுதியில் உள்ளது.
ஊ) அதனால் "உலகப் பொதுமறை" என்று போற்றப்படுகின்றது.

1) இ, ஈ, அ, உ, ஆ, ஊ
2) அ, ஆ, இ, ஊ, உ, எ
3) உ, இ, ஈ, ஆ, அ, ஊ
4) உ, ஈ, ஆ, அ, இ, ஊ



lkexam.com

மாகாணக்கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**தரம் - 11** **தமிழ்மொழியும் இலக்கியமும்** நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் : புள்ளி

**கவனிக்குக.**

✦ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
தெளிவான கையெழுத்தில் எழுதுக.

✦ இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

---

## பகுதி II

**01) சுருக்கமான விடை தருக.**

1) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றும் கொண்டார் யாமெந்தையும் இலமே

2) தயிர்ச்சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது
   1) இவ்வாக்கியத்தில் பயன்படுத்திய அணி யாது விளக்குக.
   2) இவ்வாக்கியத்தில் பயன்படுத்திய வேற்றுமையின் பொருள் யாது?

3) பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான குறியீடுகள் கொண்டு அமைக்குக.
ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரையில் வாடியிருக்குமாம் கொக்கு என்ற ஔவையாரின் வாக்கினை யாவரும் கேண்மின்

4) உத்தியோக பூர்வ கடிதத்தின் கட்டமைப்பினை ஒழுங்கு முறைப்படி வரிசைப்படுத்துக?

5) அப்துல் கலாமால் அறிவியல் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. இவ்வாக்கியத்தினை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக?

6) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு என்ற பழமொழியின் பொருளினைக் கூறுக?

7) பின்வரும் வாக்கியத்தின் தலைமைத் தொடர் சார்புத் தொடர் என்பவற்றினைக் கூறுக.
பாரதிதாசன் தேசபக்தி பாடல்களை மக்களின் நலனுக்காகப் பாடினார்.

8) தேசிய பாராட்டுக்களைப் பெற்ற அந்த கவிஞன் தன் விருதினை பெருமிதத்தோடு நோக்கினான் - இவ்வாக்கியத்தினை வழு நீக்கி எழுதுக.



lkexam.com

9) நீலாம்பரி இராகத்தினை நீ எளிதில் பாடலாம் எனினும் தாளக் கட்டினை சரிவரப் போடுவதில்லையே - இங்கு வந்துள்ள இணைப்பிடைச் சொல் யாது?

10) பாரொடு விண்ணாய்ப் பரந்த என் பரனே! பற்று நான் மற்றிலேன் கண்டாய் - இத் தொடரின் எழுவாய், பயனிலையைக் கூறுக?

(20 புள்ளிகள்)

## 02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாள 250 சொற்களுக்கு குறைவுபடாமல் எழுதுக.

1) எமது பண்பாடு மிகவும் உயரியது; அழகிய பாரம்பரியக் கூறுகளைக் கொண்டது. போற்றுதலுக்குரிய எமது பண்பாடு இன்றைய தலைமுறைகளால் உதாசீனப்படுத்தப்படுவதைக் காணலாம். இதற்கு அடிப்படை ஒழுக்கங்களைப் பின்பற்றாமையே காரணமாகும். எமது தலைமுறையைக் காப்பாற்றுவதற்கு ஒழுக்கம் அவசியம் என்பதை வலியுறுத்தி ஒரு **விளக்கக்கட்டுரை**.

2) இன்றைய தொடர்பாடல் சாதனங்கள் மனித குலத்திற்கு கிடைத்த வரப்பிரசாதங்கள். ஆனால் இவற்றின் பயன்பாடு மாணவர் கல்வியில் அதிகளவு எதிர்மறைப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இவ் இருவேறுபட்ட கருத்துடையோருக் கிடையேயான உரையாடல்.

3) ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் விவசாயம், கைத்தொழில், தொழில்துறையில் தங்கியுள்ளது. அத்துடன் வெளிப்பாய்ச்சல் கொண்ட செலாவணிப் பழக்கத்திலேயிலும் தங்கியுள்ளது. அத்துடன் ஓர் நாட்டின் அபிவிருத்திக்கு வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதியினைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து சந்தைப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். எனவே தன்னிறைவு கொண்ட உற்பத்தியின் அவசியத்தினை உணர்த்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

4) மனித வாழ்வு இலட்சியம் கொண்டது. இன்று சாயதேவி கலாநிதிப்பட்டம் கையில் பெற்றாள். இதற்காக அவள்பட்ட இன்னல்கள், எதிர் கொண்ட அவமானங்கள் அப்பப்பா.... அவள் பெற்றோர் பட்ட துயரம்... கண்ணை மெதுவாகச் சுழற்றி அவள் தந்தை பெருமிதத்தோடு சிரிப்பது தெரிந்தது...... இலட்சிய உழைப்பின் வெற்றி என்ற கருப்பொருளில் **சிறுகதை** ஒன்று எழுதுக. (25 புள்ளிகள்)

## 03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தினை 40 - 45 சொற்களில் அமையுமாறு எழுதுக.

தமிழ் இலக்கியங்களின் புதுமைகளையும் அருமைகளையும் சொல்லும் தரம் அன்று கி.முற்பட்ட காலத்தில் இருந்து இற்றை வரை மானிட வாழ்க்கையின் உன்னதங்களையும் மேன்மைகளையும் இவை விளக்கி நிற்கின்றன. சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றைய ஹைக்கூ கவிதைகள் வரை மானிட வாழ்வின் மேன்மைகளையே பாடி நிற்கின்றன.

பழைய தமிழர் தம் வாழ்வின் அற்புத வடிவங்களான சங்க இலக்கியங்கள் காதலும் வீரமும் கலந்த உன்னத வாழ்க்கையைக் கூறுகின்றன. அதன் பின்னர் தோன்றிய சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களே காப்பியங்களாகவும் அறநூல்களாகவும் பரிணமித்து மனித வாழ்வின் அனைத்து வடிவங்களையும் அழகுற எடுத்துக் கூறுகின்றன. கல்வி அழகு, பொருளின் முக்கியத்துவம், நட்பின் அவசியம், பண்பு, ஒழுக்கம், நன்றி மறவாமை, அரசியல், இனியவை எவை இன்னாதவை எவை என்று அழகாக எடுத்து “வையத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை” முறையினை இலக்கியங்கள் செப்பி நிற்கின்றன.



lkexam.com

மேலும் நோக்கின் சிலம்பும் மணிமேகலையும் கற்புடைப் பெண்டிரின் மேன்மையை அரசியல் தர்மத்தின் மேன்மையையும் அழகாக எடுத்துரைக்கின்றன.

இதேபோன்று பல்லவர் கால பக்தி இலக்கியங்கள் தெய்வீக அனுபவங்களையும் மறு உலக வாழ்வினையும் எடுத்துக் காட்டுகின்றன. சோழர்காலத்தில் தோன்றிய கவின்நிலைகள் காப்பியங்கள் சிற்றிலக்கியங்கள் எல்லாமே மனிதமாண்பினையும் மகத்துவங்களையும் எடுத்துக் காட்டுகின்றன. மகாபாரதம், கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற இதிகாசப் புராணகாப்பியங்கள் இரத்தினக்கல் அன்ன வாழ்வியல் மேன்மைகளை எடுத்துரைக்கின்றன.

கம்பராமாயணத்து கதை மாந்தர்களான இராமன், இராவணன் என்ற பாத்திரங்கள் அறமே வாழ்வு என கூறவில்லை

இதே போன்று நாயக்கர் கால இலக்கியங்கள் மனித வாழ்வின் கோசங்களை அழகுறக் கூறுகின்றன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் இலக்கியம் புதிய வடிவம் பெறுகின்றது. இங்கு பாரதி வருகையும் குறிப்பிடத்தக்கது. "தனிமனிதனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று மானிடக்கவிஞனும் அவனைத் தொடர்ந்து பொதுவுடமைக் கொள்கை பாடும் புரட்சிக் கவிஞனும் மானிட மேன்மைகளை புகட்டி நிற்கிறார்கள்.

ஆக மொத்தம் எமது எல்லைகள் கடந்த பரந்து விரிந்த தமிழ் இலக்கியங்கள் பேசிய வாழ்க்கை முறை மிக உன்னதமானது; அதனை காப்பது நமது கடமையே!

(10 புள்ளிகள்)

**04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

நினைவுகள் அணுத்திண்மங்களில் சேகரித்து வைக்கப்படுகின்றன என்பதை விஞ்ஞானம் இன்று நிறுவியுள்ளது. டானிக்கனின் கருத்துப்படி வேறு கோள்களில் இருந்து வந்த அறிவு படைத்த உயிரினங்கள் எமக்கு கற்பித்து போனவை. இவ் அணுத்திண்மங்களில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவை காலப்போக்கில் மீட்கப்படும் அச்சுக்கலையும் கடிகாரமும் காரும் ஆகாய விமானமும் ஏறத்தாழ ஒரு காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை தற்செயல் நிகழ்வு அன்று என டானிக்கன் கருதுகின்றார். இதேபோன்றே இவ்வுலகிற்கு அறிவு படைத்த உயிரினங்கள் வருகை தந்திருக்கலாம் என்ற கருத்து பல்வேறு பேர்களால் பல்வேறு நூல்களில் எடுத்துரைக்கப்படுவதும் தற்செயல் நிகழ்வு அல்ல என்று அவர் கூறுகின்றார். இவை யாவும் அணுத்திண்மங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டைய நினைவுகள் திட்டமிட்டப்படிக் காலக் கிரமத்தில் மீட்டெடுக்கப்படும் விளைவே என்று கருதுகிறார். ஒவ்வொரு உயிர் இனத்தின் வளர்ச்சியும் இறப்பும் அதன் நியூகிலியசிலே நிரப்பப்பட்டிருப்பது போல இந் நினைவுகளும் எம் அணுத்திண்மங்களில் நிரப்பப்படுத்தப்பட்டிருப்பதனாலே தான் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உலகத்தை ஆட்டிப்படைக்கும் கருத்துக்களும் கண்டுபிடிப்புக்களும் புதிய ஆக்கங்களும் உருவாகின்றன என்று அவர் கருதுகின்றார். டானிக்கன் புதைபொருள் ஆராய்ச்சி மூலமும் இலக்கியங்களின் பதிவுகள் மூலமும் தன் கருத்திற்கு அரண் செய்கின்றார்.

1) நினைவுகள் பற்றி விஞ்ஞானம் நிறுவியுள்ளது யாது?
2) டானிக்கன் தற்செயல் நிகழ்வு அல்ல என எவற்றினைக் குறிப்பிடுகின்றார்?
3) உயிரினங்களின் வளர்ச்சியும் இறப்பும் எதில் நிரப்பப்பட்டிருக்கின்றது என டானிக் கூறுகின்றார்?
4) இப்பந்தியில் பயன்படுத்திய உவமையணி ஒன்றினைத் தருக.
5) பின்வரும் அரும்பதங்களின் பொருளைத் தருக.
சேகரித்தல், நிகழ்வு (10 புள்ளிகள்)



lkexam.com

**05)** உமது கிராமத்தின் விவசாயக்குழுத் தலைவராக உம்மைக் கருதி, வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்குமாறு 100 சொற்களுக்குக் குறையாது அரசாங்க அதிபருக்கு ஒரு கடிதம்.

அல்லது

உமது பாடசாலையில் விளையாட்டுக் குழுச் செயலாளராகக் கருதிக் கடந்த வாரம் நடைபெற்ற மெய்வல்லுநர் விளையாட்டு விழா பற்றிய அறிக்கை ஒன்றினைத் தயார் செய்க.
*(100 சொற்கள்)*

*(15புள்ளிகள்)*



**lkexam.com**

மாகாணக்கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**தரம் - 11** **தமிழ்மொழியும் இலக்கியமும்** நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் : புள்ளி

கவனிக்குக.

✦ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
தெளிவான கையெழுத்தில் எழுதுக.

✦ இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

## பகுதி III

**01) சுருக்கமான விடை தருக.**

1) பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார்.....
அ) இவ்வாறு வேகமாக எழுந்தவர் யார்?
ஆ) எழுந்திடக் காரணம் யாது?

2) "யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்...."
அ) இப்பாடலடி இடம்பெறும் நூல் யாது?
ஆ) யாருடைய நட்பைத் தழுவ வேண்டும்?

3) "பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்த தென்று
சங்கிட்டெறிய"
அ) பழனம் என்பதன் கருத்து யாது?
ஆ) இங்கு வெளிப்படும் இயற்கை வளம் யாது?

4) "கடலே இரையாதே காற்றே நீ வீசாதே
நிலவே எறியாதே - என்ர நீலவண்டு போய்ச் சேருமட்டும்"
அ) இங்கு நாயகி எவ்வாறு உருவகிக்கப்படுகின்றாள்?
ஆ) நிலவே எறியாதே எனக் கூறக் காரணம் யாது?

5) "ஏதிலார் ஆரத்தமர் பசிப்பர் பேதை
பெரும் செல்வம் உற்றக் கடை"
அ) இங்கு தமர் என்பதன் கருத்து யாது?
ஆ) இக்குறட்பாவைக் கொண்டு கூட்டி எழுதுக.

6) வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு
அ) ஆலிங்கனம் என்ற சொல்லின் பொருள் யாது?
ஆ) வியக்க வைத்த அழகு எது?



lkexam.com

7) “அன்னப்பெடை சிறை இலது ஆய்க்கரை
துன்னிற்று என்னவும் வந்தது தோணியே”
அ) இப்பாடலடிகளில் வரும் எழுவாய் யாது?
ஆ) இங்கு வந்த அணியைத் தருக.

8) “கிழங்கு கிள்ளித்தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்”
அ) மேற்குறித்த செயல்களைச் செய்பவர்கள் யார்?
ஆ) “கிம்புரியின் கொம்பு” என்பது எதனைக் குறிக்கிறது.

9) “உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
அ) இங்கு குறிப்பிடப்படும் உயிருடன் சென்ற ஒரு மகள் யார்?
ஆ) இப்பாடற்பகுதி எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

10) இப்போது சினிமா மொழி நமக்குப் பரிச்சயம் இல்லாத ஒன்றாக இருக்கிறது.
அ) பரிச்சயம் என்பதன் பொருள் யாது?
ஆ) சினிமா மொழி என்பதில் மூன்று அம்சங்கள் உள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒன்றினைக் குறிப்பிடுக. *(20 புள்ளிகள்)*

**02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப்பகுதியையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

1) தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே.

அ) இப்பாடலில் வெளிப்படும் முக்கியமான கருத்து யாது?
ஆ) இங்கு வண்டு, மண்டூகம் என்பன எவ்வெவற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன?

2) முழங்கு திரைப் புனலருவி கழங் கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடு
கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினையிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்கு கொடை மகராசர் குறும்பலவின் ஈசர்
வளம் பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

அ) இப்பாடலில் மலை வளத்தை விபரிப்பதற்கு எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் யாவை?
ஆ) இப்பாடலில் எடுத்தாளப்பட்டுள்ள உயர்வு நவிற்சியணியைத் தருக.

3) ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும் கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர் ஆர்தட்டினும் தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு மார்தட்டிய துரை மால் சீதக் காதி வரோதயனே.
அ) இப்பாடலில் பஞ்ச காலம் எவ்வாறு வெளிப்படுகிறது?
ஆ) சீதக்காதி வள்ளலின் கொடைத்தன்மை எவ்வாறு கூறப்படுகின்றது?
*(15 புள்ளிகள்)*

4) தூல வடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவுமுள்ள உண்மைக் கவிஞர்கள் காவியங்களிலே சூக்கும வடிவில்



lkexam.com

அமைத்துக் காட்டுகின்றார்கள். இவ் அற்புதக் காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமற் கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம் இதேபோன்று இலக்கியங்களும் அபின்னம். இலக்கியங்களுடன் அபின்னமாய் நின்று உணர்வார்க்கு இவை புலனாகும். நூறாண்டு கழிந்தாலும் உண்மையிலக்கியங்கள் புதுமை பெற்று உள்ளங்களைத் தளிர்த்து மலரச் செய்கின்றன.

அ) கவிஞர்கள் காவியங்களில் யாரைச் சூக்கும வடிவில் அமைத்துக் காட்டுகிறார்கள்?
ஆ) இலட்சியங்களுக்கும் இலட்சியவாதிகளுக்குமிடையிலான தொடர்பு எத்தகையது?

5) இந்த சினிமா மொழியை அதன் தன்மையை தனித்துவத்தை உணர்ந்து ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது அங்கே நல்ல சினிமா பிறக்கிறது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகின்றது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது. சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் "ஓகோ விடிகிறது எனலாம். கவிஞன் அதைக் கண்டாலோ "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்கிறான்.
அ) சினிமா மொழி என்றால் என்ன?
ஆ) சினிமா எப்போது நலிவடைகிறது? (20 புள்ளிகள்)

03) நீதிப்பாடல்களைத் துணையாகக் கொண்டு விடை தருக.

1) அ) "கணக்காய ரில்லாத...." எனத் தொடங்கும் திரிகடுகப் பாடலில் நன்மை பயக்காத மூன்று விடயங்களும் எவை?
ஆ) "உப்பில்லாக் கஞ்சியினை..." எனத் தொடங்கும் முதுமொழி வெண்பாப் பாடலில் மனத்திருப்தியுடன் வாழ்வோர் இயல்புகள் யாவை?
இ) "கற்றார் முன்..." எனத் தொடங்கும் இனியவை நாற்பது பாடலில் இனிதான செயல்கள் மூன்றும் எவை?

**அல்லது**

2) இராமாயணம் **குகப்படலத்தை** மையமாகக் கொண்டு விடை தருக.
பரதனது பார்வையில்
அ) கோசலை
ஆ) சுமித்திரை
இ) கைகேயி
ஆகிய பாத்திரங்களின் குணப்பண்புகளை விபரிக்குக. (15 புள்ளிகள்)

**04) கம்பியூட்டர்** என்ற சிறுகதையில்

அ) வெளிப்படும் முக்கியமான கருத்து யாது?
ஆ) பாத்திர வார்ப்புக்கள் ஊடாக முக்கியமான கருத்து வெளிப்படும் விதத்தை விபரிக்குக.
இ) ஆசிரியரின் நகைச்சுவை சார்ந்த மொழிநடையினை விளக்குக.

**அல்லது**

**இலட்சியங்களும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்

அ) இலக்கியங்கள் வெளிப்படுத்தி நிற்கும் இலட்சியங்களைக் கூறுக.
ஆ) இலட்சிய வாழ்வினால் பெறும் பயன்களைத் தருக. (15 புள்ளிகள்)



lkexam.com

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5) சீறி ஓடாத வருங்கால மனித நதி என்ற கவிதையில்

அ) வெளிப்படும் மையக்கருத்து யாது?

ஆ) மையக் கருத்து வெளிப்படுத்தப்படும் விதத்தை விளக்குக? (10 புள்ளிகள்)

6) அற்றைத் திங்கள் என்ற நாடகத்தில்

அ) பிரிவுத்துயர்

ஆ) முன்னைய வாழ்வின் ஏக்கம்

விபரிக்கப்படுமாற்றினைஎடுத்துக்காட்டுக. (10புள்ளிகள்)

7) இனி நினைந்திரக்கமாகின்று........ எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலைத் துணையாகக் கொண்டு

அ) இளமைக்காலத்து நினைவும்

ஆ) முதுமைக்காலத்து நிலையும்

விபரிக்கப்படுமாற்றினை விளக்குக (10புள்ளிகள்)



lkexam.com